2003 நவம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4-11-2003) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 12-24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின் திருத்தங்கள் செய்தது குறித்தும் மற்றும் 1973ஆம் ஆண்டு அடுக்குமாடி மற்றும் பொது கட்டட விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 11-10-2002 ஆம் நாளிட்ட 138ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும் மற்றும் 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மலைப்பிரதேச) கட்டட விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 16-8-2002ஆம் நாளிட்ட 112ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் (ஒப்புதல் பெறாமலும் விதிகளுக்குப் புறம்பாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் நிலமேம்பாடுகளை முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 31-7-2002 ஆம் நாளிட்ட 104 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி (மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு,

1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவு ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

4. 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநராட்சிகள் பணி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 14-2-2003-ஆம் நாளிட்ட 13-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)*

5. மேட்டூர், பாரதி நகர், திரு. பழனியப்பன் என்பவரின் மகன் திரு. பி. மாணிக்கம், என்பவருக்குச் சொந்தமான எம்.டி.இ.0972 என்ற எண் கொண்ட சரக்கு உந்து தொடர்பாக, 1-1-1991 முதல் 30-4-1995 முடிய உள்ள கால அளவுக்குரிய வசூலிக்க இயலாத மோட்டார் வாகன வரி ரூ.31,534/- மற்றும் அபராதம் ரூ.51,024/- வகையில் மொத்தம் ரூ.82,558/-ஐ (ரூபாய் எண்பத்து இரண்டாயிரத்து ஐநூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) தள்ளுபடி செய்தது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 19-2-2003-ஆம் நாளிட்ட 159-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

6. 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 7-2-2003-ஆம் நாளிட்ட 118-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

7. 3-1-1996, 12-3-1997 மற்றும் 8-7-1998 ஆகிய நாட்களில் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் ஆகியவற்றை ரத்து செய்து அதற்குப் பதிலாக 1-4-2003 ஆம் நாள் முதற்கொண்டு அல்லது அந்நாளிலிருந்து மதுரையில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (மதுரை கோட்டம்-1), கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர் கோட்டம்-1) மற்றும் காரைக்குடியில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-III) ஆகியவற்றால் இயக்கப்பட்டு, முறையே மதுரை மாநகரம், நீலகிரி மாவட்டம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரம் தீவில் ஓடுகின்ற பயணிப் பேருந்துகளுக்குச் செலுத்தக்கூடிய வரி மற்றும் மேல் வரி வீதங்களை ஒரு காலாண்டிற்கு இருக்கை ஒன்றினுக்கு முறையே ரூ.80.00 (ரூபாய் எண்பது மட்டும்) மற்றும் மேற்சொன்ன வரிக்கு மேல்வரியாக 25 சதவீதமும் குறைக்கப்படுவதாக அறிவித்தது குறித்து மேற்சொன்ன வரிக்கு மேல்வரியாக 25 சதவீதமும் குறைக்கப்படுவதாக அறிவித்தது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 9-5-2003-ஆம் நாளிட்ட 395-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

8. 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 23-5-2003 ஆம் நாளிட்ட 190 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

9. TN.. 07 Y 5386 ஆம் பதிவு எண் கொண்ட மாருதி ஆமினி ஆம்புலன்ஸ் வண்டியை பொறுத்தமட்டில் அவ்வண்டி சென்னை திருவாளர்கள் முர்துழவியா இரத்த சேமிப்பு வங்கிக்குச் சொந்தமாக இருக்கின்ற வரையிலும் வாடகைக்கு விடாமல் அல்லது பயன் ஏதும் பெறாமல் மனித நேயத்துடன் உதவும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் வரையிலும், அந்த வண்டி குறித்து திருவாளர்கள் சென்னை, முர்துழவியா இரத்த சேமிப்பு வங்கி செலுத்தத்தக்க வரி வீதத்தில் 50 சதவீத வரிக்குறைப்பது (ஐம்பது சதவீதம்) குறித்து உள் (போக்குவரத்து-I)

துறையின் 4-2-2003 ஆம் நாளிட்ட 113 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

10. எண். 359, டி.எம்.எஸ். வளாகம் (சத்துணவு கட்டிடத் தொகுதி), தேனாம்பேட்டை, சென்னை-6 என்ற முகவரியிலுள்ள தேசிய இளம்பிள்ளைவாத நோய் கண்காணிப்புத் திட்டம், உலகச் சுகாதார நிறுவனத்தின் கண்காணிப்பு மருத்துவ அதிகாரி மற்றும் 'பா/பெ. சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர், விஸ்வநாதபுரம், மதுரை-625 014," என்ற முகவரியிலுள்ள தேசிய இளம்பிள்ளைவாத நோய் கண்காணிப்புத் திட்டம், உலகச் சுகாதார நிறுவனத்தின் கண்காணிப்பு மருத்துவ அதிகாரி ஆகியோரைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன திட்டத்திற்காக மேற்சொன்ன நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பயன்படுத்தப்படுகின்ற வகையில் (1) அடிச்சட்டம் எண் MAI PN4 DFC 32-A65434 உடன் எஞ்சின் எண். DF34A 17011 மற்றும் (2) அடிச்சட்டம் எண். MAI PN4 DFC 32 A-65538, உடன் எஞ்சின் எண். DF 34A 17046 ஆகியவற்றைக் கொண்டுள்ள இரண்டு மஹிந்திரா பொலேரோ ஜீப்புகளுக்குச் செலுத்தத்தக்க மோட்டார் வண்டிகள் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 21-5-2003 ஆம் நாளிட்ட 422 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

11. திரு.ப்பி. முருகேசன், மாவட்ட நீதிபதி, தலைமை நிர்வாகி மற்றும் அலுவல் முறை அறங்காவலர், சென்னை அவர்களை சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்தது குறித்து வணிகவரித் துறையின் 25-4-2003 ஆம் நாளிட்ட அரசாணை (3D) எண். 9-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

12. முதன்மைச் சார்பு நீதிபதி திருட்டி. சங்கரலிங்கம், அவர்களை மதுரை, தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதித்துறை)-ஆக நியமித்தது குறித்து வணிகவரித் துறையின் 9-5-2003 ஆம் நாளிட்ட அரசாணை (2D) எண் 54-ல்

2003 நவம்பர் 3]

வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)*

13. உரிமையியல் நீதிபதி (முதுநிலைப் பிரிவு) திரு. வி. சுப்பிரமணியன் அவர்களை சென்னை, தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதித்துறை)-ஆக நியமித்தது குறித்து வணிகவரித் துறையின் 9-5-2003 ஆம் நாளிட்ட அரசாணை (2D) எண் 55-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)*

14. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஆறாவது ஆண்டறிக்கை. *(1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்.)*

15. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. *(1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ, பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

16. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை *(1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதை தடைசெய்தல் அவசரச் சட்டம் *(தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2003)*

2. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் (திருத்த) அவசரச் சட்டம் *(தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2003)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

3. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2003)

4. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2003)

5. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2003)

6. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2003)

7. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2003)

8. 2003-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2003)

9. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

10. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

11. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

12. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

13. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

14. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS